சார்பு நீதிமன்றம், அவிநாசி

**OS No. 226 /2021**

**நாள் : 09.02.2024**

**PW 1: பாலுசாமி**

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை** :

1) என்ன காரணத்திற்காக இந்த வழக்கில் நான் Ex.A12 பட்டா பாஸ் புக் தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் பெயரில் இருப்பதால் தாக்கல் செய்துள்ளேன். உட்பிரிவை குறிப்பிடுவதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். கருணையம்மாள் என் தாயார். மகாசாமி என்பவர் என் அண்ணன். மயில்சாமி என்பவரும் என் அண்ணன்தான். என் பெயர் பாலுசாமி. 2017 ஆம் ஆண்டு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவிநாசியில் அசல் வழக்கு எண்.167/2017-ல் மயங்காத்தாள், பார்வதி, ராமாத்தாள், செல்வராஜ், செல்வி, தெய்வாத்தாள், செந்தில்குமார், தண்டபானி, சபாபதி, மகாலிங்கம், தெய்வானை, சுந்தராம்பாள் ஆகியோர் மீது தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது அந்த வழக்கின் வழக்குரை நகல்தான் என்றால் சரிதான். அது Ex.B1 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அ.வ.எண்ணில் சொத்து விவரத்தில் என்னென்ன காலைகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 685 காலை உள்ளது என்றால் சரிதான். தற்பொழுது நடந்து வரும் வழக்கிலும் 685 காலை எண். உள்ளது என்றால் சரிதான்.

2)மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவிநாசியில் அசல் வழக்கு எண்.167/2017-ல், 5-ம் பக்கத்தில் UDR முறைப்படி உட்பிரிவானது எந்த விதமான அறிவிப்பும் கொடுத்து செய்யப்பட்டதல்ல என்றும், உட்பிரிவு சட்டப்படியாக நடக்கவில்லை என்றும் நான் குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் சரியல்ல. இந்நீதிமன்றத்தில் எனது சகோதரர் மகாசாமி மேற்படி என்னுடைய தாயார் கருணையம்மாள், என்னுடைய சகோதரர்கள் மயில்சாமி மற்றும் பாலுசாமி ஆகிய நான் மற்றும் ராமாத்தாள், செல்வராஜ், செல்வி, ராமாத்தாள், தெய்வாத்தாள், செந்தில்குமார், தண்டபானி, கோவிந்தம்மாள், சுரேஷ், லோகமூர்த்தி, தெய்வானை, சுந்தராம்பாள், மகாலிங்கம், பார்வதி ஆகியோர் மீது அ.வ.எண்.291/2023 தாக்கல் செய்து அந்த வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அ.ச.எண்.226/2021-ன் 4-ம் வாதி 291/2023 வழக்கின் வாதி என்றால் சரிதான்.

3) இந்த வழக்கிலும் வழக்குரையில் UDR முறைப்படி உட்பிரிவானது எந்த விதமான அறிவிப்பும் கொடுத்து செய்யப்பட்டதல்ல என்றும், உட்பிரிவு சட்டப்படியாக நடக்கவில்லை என்றும் என் சகோதரர் குறிப்பிட்டிருக்கிறார் என்றால் இந்த வழக்கிற்கும், என்னிடம் கேட்கப்படும் கேள்விக்கும் சம்மந்தமில்லை. மேற்படி தாவாவிலும் க.ச.எண்.685 உள்ளது என்றால் சரிதான். தங்கமணி மற்றும் ஜோதிமணி, இந்த வழக்கின் பிரதிவாதிகளுக்கு 430/1956 ஆவணப்படி B பாக சொத்தாக க.ச.எண்.685-ல் அவர்களுடைய தந்தைக்கு ஒதுக்கப்பட்ட 50 செண்டும் மற்றும் மேற்படி ஆவணப்படி சின்னிய கவுண்டருக்கும், ராமசாமிக்கும் A பாக

சொத்தாக க.ச.எண்.685-ல் 1 ஏக்கராவில் சின்னிய கவுண்டருக்கு பாத்தியப்பட்ட 50 செண்டில் 25 செண்ட் பாத்தியம், ஆக மொத்தம் 75 செண்ட் பாத்தியம் என்றால் சரியல்ல. 1783/1934 என்ற ஆவணப்படி சின்னே கவுண்டர் மகன் சின்னிய கவுண்டர் (பிரதிவாதிகளின் தந்தை வழி தாத்தா)விற்கு 13 செண்ட் 685 காலையில் பாத்தியம் என்றால் 1934-ல் சின்னிய கவுண்டர் பெயரில் உள்ள சொத்துதான் 1956-ல் சின்னிய கவுண்டரும், ராமசாமிக்கவுண்டரும் பாகம் பிரித்துக் கொண்டார்கள். ஆவண எண்.430/56-க்கும், ஆவண எண்.1783/1934 என்ற ஆவணத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சின்னிய கவுண்டர் எவ்வித ஆவணமும் எழுதி வைக்காத காரணத்தால், அவர்களுடைய வாரிசுகளான ராமசாமி, பிரதிவாதிகள் தந்தை சின்னிய கவுண்டருக்கு பாத்தியம் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் தந்தை காலமானதால் அந்த 13 செண்ட் பிரதிவாதிகளுக்கு பாத்தியம் என்று சொன்னால் சரியல்ல. நானே உட்பிரிவு செல்லாது என்று ஒரு வழக்கை தாக்கல் செய்துவிட்டு, தற்போது உட்பிரிவுகள் சரியாக உள்ளது என்று குறிப்பிடும் சங்கதி முரண்தடையினால் பாதிக்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை.

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.*

K SURESH KUMAR

Digitally signed by K SURESH KUMAR
Date: 2024.02.09 17:28:24 +0530

Subordinate Judge,
Avinashi.